1979 நவம்பர் 9]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 71/1979 நிறைவேற்றப் பெற வேண்டும்" என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

(மாலை 6.10)

(13) கூட்டுறவுச் சங்கங்கள் (நான்காவது திருத்த) சட்ட முன்வடிவு 1979

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே,

"கூட்டுறவுச் சங்கங்கள் (நான்காவது திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 72/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்" என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே,

"தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (நான்காவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1979) நிறைவேற்றப் பெற வேண்டும்" என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

திரு. எம். ஏ. லத்தீப், திரு. சோ. அழகர்சாமி ஆகியோர் எழுந்திருந்தனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 4.30 மணியிலிருந்து 7.30 மணிக்கு முடிக்க முடிவு எடுக்கப்பட்டது. இன்னும் ஒன்றரை மணி நேரம் ஆகவில்லை.

---

* 1979 நவம்பர் 6-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

(திரு. எம். ஏ. லத்தீப், திரு. சோ. அழகர்சாமி ஆகியோர் எழுந்து நின்றனர்.)

உறுப்பினர்கள் பேசுவதற்கு முறையாக நேரம் தரப்பட்டிருக்கிறது. இதை நீங்கள் இருவரும்தான் எழுப்புகிறீர்கள், மற்றவர்கள் ஒத்துழைக்கிறார்கள்.

(15) தனியார் காடுகள் பாதுகாப்பு (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு 1979.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே,

"தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு தனியார் காடுகள் பாதுகாப்பு (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 67/1979) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்" * என்று மொழிகிறேன்.

இதைத் தொடர்ந்து இன்னொரு சட்ட முன்வடிவும் இருக்கிறது. இரண்டும் ஒரே பொருள் பற்றியது. விவாதத்தின்போது இரண்டின் மீதும் உறுப்பினர்கள் கருத்து தெரிவித்தால் இரண்டையும் நிறைவேற்ற துணையாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு சட்ட முன்வடிவுகளையும் ஒட்டிப் பேச வேண்டும். திரு. உச்சி.

திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே, தனியார் காடுகளைப் பாதுகாத்தல் என்ற சட்ட முன்வடிவையொட்டி நான் எனது கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். தனியார் காடுகள் மலைப் பகுதிகளில் உள்ள மக்களுடைய அழியாத ஒரு சொத்து. அங்குள்ள மரங்களை அவர்கள் தங்கள் தேவைக்கேற்ப அந்தந்த நேரங்களில் வெட்டுவார்கள். மரங்களை வெட்டுவதால் மழை குறைந்துவிடுகிறது என்றெல்லாம் அமைச்சர் அவர்கள் குன்னூரில் நடந்த ஒரு கூட்டத்தில் சொன்னார்கள். ஒரு பத்தாண்டுகளுக்கு மரங்களை வெட்ட வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டார்கள். அந்தக் கூட்டத்தில் நானும் இருந்தேன்.

---

*1979 நவம்பர் 5-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS